# என்றுதான் முடியுமிந்த நதிநீர்ச் சிக்கல்கள்?

தமிழக - கேரள முதல்வர்கள் மூன்று மாதங்களுக்கு முன்பு சந்தித்து இரு மாநில நதிநீர்ப் பிரச்னைகள் குறித்து திருவனந்தபுரத்தில் பேசினார்கள். அப்போது சில பிரச்னைகள்தான் பேசப்பட்டன என்றும், அதில் இருமாநிலங்கள் தொடர்பான அனைத்து நதிநீர்ப் பிரச்னைகள் குறித்துப் பேசவில்லை என்றும் விமர்சனம் எழுந்தது.

அதன் பின், கடந்த 12.12.2019 அன்று தமிழக, கேரள பொதுப்பணித் துறை அதிகாரிகளும் இரண்டு அரசு பிரதிநிதிகளும் சந்தித்து பரம்பிக்குளம் – ஆழியாறு பிரச்னை குறித்து சென்னையில் விவாதித்தனர். இந்தக் கூட்டத்தில் பரம்பிக்குளம் - ஆழியாறு பிரச்னை மட்டுமில்லாமல் தொழில்நுட்பம், நீர்ப் பகிர்வு குறித்துப் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது. மீண்டும் ஜனவரி - பிப்ரவரி மாதத்தில் திருவனந்தபுரத்தில் கூடிப் பேச இருப்பதாகவும் தெரிவித்தனர். பரம்பிக்குளம் – ஆழியாறு நதிகளின் ஒப்பந்தம், மாதந்தோறும் நீர்ப்பங்கீடு, வழங்குதல் குறித்துத் தீர்வு எட்டப் போவதாகவும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த விமர்சனத்தை உறுதி செய்யும் வகையில், பரம்பிக்குளம் அழியாறு, பாண்டியாறு - புன்னம்புழா திட்டங்களுக்கு மட்டும் பேச தலா 5 பேர் கொண்ட மொத்தம் 10 பேர் அடங்கிய குழு அமைக்கப்படும் என்று இரு மாநில முதல்வர்கள் அறிவித்தனர். அதன் தொடர்ச்சியாக, தமிழக அரசாணை எண். 55-இன்படி கேரள அரசோடு பேச குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆழியாறு பரம்பிக்குளம், பாண்டியாறு-புன்னம்புழா பிரச்னைகள் மட்டுமே அல்ல, தமிழகத்துக்கும் கேரளத்துக்கும் இடையேயான நதிநீர்ப் பிரச்னைகள் கன்னியாகுமரி மாவட்டம் நெய்யாற்றிலிருந்து கொங்கு மண்டலம் வரை 40 ஆண்டுகளுக்கும் மேலாகத் தீர்க்கப்படாத திட்டங்களாகப் பல பிரச்னைகள் இருக்கின்றன.

தமிழகத்தின் தென் மாவட்டங்களான மதுரை, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகியவை வறண்ட பகுதிகளாக உள்ளன. இவை போன்றே மேற்குத் தொடர்ச்சி மலைகளை யொட்டிய கோவை மாவட்டமும் வறண்ட பகுதியாகும். இந்த மாவட்டங்களில் வறண்ட காலங்களில் குடிப்பதற்குக் கூட குடிநீர் இல்லாத அவலநிலை அடிக்கடி ஏற்படுகிறது.

கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிச் செல்லும் நதிகளின் எஞ்சிய நீரை அணைகள் கட்டிச் சுரங்கங்களின் வழியாகத் தமிழகத்துக்குக் கொண்டு வந்தால், தமிழகத்தின் தென் மாவட்டங்கள் வளம் பெறும். இந்தப் பிரச்னையைப் பல ஆண்டுகளாகத் தமிழகம் வலியுறுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றாவிட்டால் பிற்காலத்தில் இந்தப் பகுதிகள் பாலைவனங்களாக மாறும் அபாயம் இருக்கிறது.

கேரளத்தில் உற்பத்தியாகும் நதிநீரை முழுமையாகக் கேரள மக்கள் பயன்படுத்த முடியவில்லை. அதிகமான மலைப் பிரதேசங்கள் இருப்பதால் விவசாய நிலங்கள் குறைவு. கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் 85 நதிகள் உள்ளன. இந்த நதிகளின் மூலம் 1,98,000 மில்லியன் கியூபிக் மீட்டர் தண்ணீர் செல்கிறது: இதில் சுமார் 1 லட்சத்து 25 ஆயிரம் மில்லியன் கியூபிக் மீட்டர் தண்ணீர் மட்டுமே செல்வதாக திட்டக் குழுவின் 1978-ஆம் ஆண்டு அறிக்கை கூறுகிறது.

தமிழ்நாட்டின் நீர்வளம் சுமார் 1,350 டி.எம்.சி. ஆகும். ஆனால், கேரளத்தின் நீர்வளம் சுமார் 2,500 டி.எம்.சி. இதில் சுமார் 1,100 டி.எம்.சிக்கும் அதிகமான நீர் வீணாகி அரபிக் கடலில் சேருகிறது. (இந்தத் தண்ணீரின் அளவு மேட்டூர் அணையிலுள்ள நீரைப்போல சுமார் 11 மடங்கு ஆகும்.) கேரள மாநிலத்துக்குத் தேவையான நீர் சுமார் 850 டி.எம்.சி. மீதமுள்ள நீரைத் தமிழகத்துக்குக் கொடுத்தால் சுமார் 8.20 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேற்குநோக்கிப் பாயும் நதிகளைத் தமிழகத்துக்கு திருப்புவது குறித்து ஆராய 1976-ஆம் ஆண்டு குழு அமைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைப் பற்றி ஆராய்ந்து உபரி நதிநீரைத் தமிழகத்துக்குத் திருப்புவதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளன என அந்தக் குழு கூறியது. அதன் பின்பு, மத்திய, தமிழக கேரள அரசுகள் சுமார் 20 முறைக்கும் மேல் இது குறித்துப் பேசியும் எவ்விதத் தீர்வும் எட்டப்படவில்லை. நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவையிலும் இந்தப் பிரச்னை பல முறை எழுப்பப்பட்டுள்ளது.

கேரளத்தில் ஓடுகின்ற சாலியாறு, பாரதப்புழா, சாலக்குடிப்புழா, பெரியாறு, ஆழியாறு ஆகியவற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் தமிழகத்தில் உள்ளன. இந்த ததிகள் கேரள மாநிலத்தில் திருச்சூர், பாலக்காடு, மலப்புரம் ஆகிய மாவட்டங்களில் பாய்ந்து அந்தப் பகுதிகளுக்கு வளம் சேர்க்கின்றன. அதே போன்று கீழ்க்கண்ட நதிநீர்ப் படுகையிலிருந்து தமிழகத்துக்கு நீர் கொடுத்தால், தமிழகம் நிச்சயம் வளம் பெறும்.

சாலியாறு படுகையில் உள்ள பாண்டியாறு, புன்னம்புழா, மேயாறு, சோலத்தபுழா, பன்சிகல்ல ஆகிய நதிநீர் மூலம் கோவை மாவட்டம் பயன்பெறும். இதில் எஞ்சிய நீர் சுமார் 150 டி.எம்.சி. ஆகும். இந்த நீரில் சுமார் 18 டி.எம்.சி. நீரைத் திருப்பினால் பெருமளவு ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி பெறலாம்.

பாம்பாற்றின் மொத்த நீர்ப் பிடிப்பு சுமார் 230 டி.எம்.சி. ஆகும். இதில் எஞ்சிய நீர் சுமார் 180 டி.எம்.சி ஆகும். இதில் திருப்ப வேண்டிய அளவு சுமார் 25 டி.எம்சி. ஆகும். இதனால், தமிழகத்தில் விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்கள் வளம் பெறும்.

அச்சன்கோவில் ஆற்றில் செல்லும் நீரின் அளவு 77 டி.எம்.சி. ஆகும். இதில் கிடைக்கும் எஞ்சிய நீர் சுமார் 9டி.எம்.சி.அளவை தமிழகத்துக்குத் திருப்பினால் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்தின் சில பகுதிகள் பயன்பெறும்.

ஆனைமலை, இடுக்கி, கல்லாறு போன்றலும் கேரளத்தின் மேற்கு நோக்கிப் பாயும் மூன்று ஆறுகளிலிருந்து நீர் செல்லும் 85 நதிகளில் சிலவற்றை தமிழகத்துக்குத் அளவு சுமார் 380 டி.எம்.சி ஆகும். இதில் உள்ள எஞ்சிய நீரான சுமார் 320 டி.எம்.சியை தமிழகத்துக்குத் திருப்பினால் கோவை, மதுரை, ராமநாதபுரம் ஆகிய பகு திகள் பயனடையும். இதனால் மதுரை மாநகருக்குக் குடிநீர் வசதி பெற வாய்ப்புள்ளது.

நெய்யாற்றில் இரண்டு கால்வாய்கள் உள்ளன. இதில் ஒரு கால்வாய், 1956-இல் கேரள மாநிலத்திலிருந்து சில பகுதிகள் தமிழ்நாட்டில் இணைக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்குப் பாசன வசதி செய்ய அமைக்கப்பட்டது. ஆனால், சுமார் 160 கனஅடி தண்ணீர் தமிழகத்திலுள்ள இந்தப் பகுதிகளுக்கு கேரள அரசு கொடுக்க வேண்டும். ஆனால், கேரள அரசு கொடுப்பதற்கு மறுத்து வருகிறது. இதனால், சுமார் 9,000 ஏக்கர் நிலம் வீணாகிறது.

கல்லட, அட்டிங்கல், கரமன ஆகிய ஆறுகளில் நீர் செல்லும் அளவு சுமார் 160 டி.எம்.சி. ஆகும். இதில் எஞ்சிய நீரான சுமார் 110 டி.எம்.சி.யில் தமிழகத்துக்குத் திருப்ப வேண்டிய அளவு வெறும் 16 டி.எம்.சி. ஆகும். இதனால் திருநெல்வேலி, தூத்துக்குடிமாவட்டங்கள் பயன் பெறும். இந்தப் பிரச்னையில் கேரள அரசு சரியான ஒத்துழைப்பு அளிக்கவில்லை எனத் தெரிகிறது. கேரள அரசு இந்த எஞ்சிய நீரைத் தமிழகத்துக்குத் திருப்பினால் கேரளத்தில் மீன்பிடித் தொழில் பாதிக்கும் என்ற விநோதமான காரணம் கூறப்படுகிறது. ஆனால், தமிழகத்துக்கு வெறும் 82 டி.எம்.சி. அளவு நீர்தான் தேவைப்படுகிறது. இதனால் கேரளத்திற்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை.

கேரள மாநில அச்சன்கோவில் பம்பையை தமிழகத்தின் வைப்பாறோடு இணைப்பது, குமரி மாவட்ட நெய்யாறு, திருநெல்வேலி மாவட்டத்தின் அடவிநயினார், உள்ளாறு, செண்பகத்தோப்பு, விருதுநகர் மாவட்டம் அழகர் அணைத்திட்டம் மற்றும் முல்லைப் பெரியாறு, பாண்டியாறு - புன்னம்புழா, ஆழியாறு - பரம்பிக்குளம், சிறுவாணி, பாம்பாறு எனப் பல பிரச்னைகளுக்கும் தீர்வுகாண வேண்டும்.

கல்பாக்கம் அணு மின்சாரம் உள்பட அரிசி, காய்கறிகள், எண்ணெய், மணல் போன்ற பல அத்தியாவசியப் பொருள்களை தமிழகத்திலிருந்து கேரளத்துக்கு நாம் அனுப்பி வைக்கிறோம். ஆனால், ‘தண்ணீர் தரமாட்டோம், வீணாகக் கடலுக்குத்தான் விடுவோம்’ என்று கேரளம் தொடர்ந்து அடம் பிடிக்கிறது.

இது குறித்து பல குழுக்களை மத்திய அரசு அமைத்து அறிக்கைகளை வழங்கியும், அந்த அறிக்கைகளின் பரிந்துரைகளை கேரள அரசு பரிசீலிக்காமலேயே தூக்கி எறிந்தது. கடந்த 1983-இல் நான் தாக்கல் செய்தநதிநீர் இணைப்பு குறித்தான வழக்கிலும் கேரளத்தின் மேற்கு நோக்கிப் பாயும் 85 நதிகளில் சிலவற்றைத் தமிழகத்துக்குத் திருப்பியும், அச்சன்கோவில் பம்பை வைப்பாறோடு இணைக்க வேண்டியும், 2012- இல் உச்சநீதிமன்றம் ஒரு சாதகமான தீர்ப்பினை அளித்தும் இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வுகள் ஆமை வேகத்தில் உள்ளன.

இவ்வளவு சிக்கல்கள் கேரளத்தோடு இருந்தும், பாண்டியாறு புன்னம்புழா, பரம்பிக்குளம் ஆழியாறு சிக்கலை மட்டும் பேச தமிழக அரசு குழு அமைத்துள்ளது. இந்தப் பிரச்னைகளும் முக்கியம்தான் என்பதை மறுக்கவில்லை. ஆனால், நீண்ட நெடுங்காலமாக மேற்குறிப்பிட்ட பிரச்னைகளுக்கும் தீர்வு எட்டப்பட வேண்டாமா? இவ்வளவு பிரச்னைகள் இருப்பதாவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? கேரளத்துடனான அனைத்து நதிநீர்ப் பிரச்னைகளுக்கும் தீர்வு காண்பதில் அரசு மேலும் முனைப்புக் காட்ட வேண்டியது அவசியம்.

தினமணி,